**காலி மாநகர சபை – 2022**

**--------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

காலி மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, காலி மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம பாதகமானதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 4,425,592 தொகை பெறுமதியான களஞ்சியப் பண்ட இருப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் களஞ்சிய கடன் கொடுத்தோர் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பல்வேறு விடயங்களுக்காக சபையின் பொதுக் களஞ்சியத்தில் இருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 327,031 தொகை பெறுமதியான பண்டங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த நிலுவை வருமானம் ரூபா 36,010,184 தொகை நடைமுறை ஆண்டின் வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டு தொடர்பாக பெற வேண்டிய கைத்தொழில் வரி ரூபா 374,250 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிறைவேற்றப்பட்டிருந்த வேலைப் பகுதிகளை அறுதியாக இனங்காணாமல் 15 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 17,624,788 தொகை நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. | 2022 ஆண்டிற்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது என. | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 10,461,330 தொகைக்கான 02 இயந்திரங்களை கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 9,991,255 தொகை மீண்டுவரும் செலவுகளுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | அறவீடு செய்யப்பட்ட ரூபா 11,001,976 இற்கான திருப்பிச் செலுத்தப்படாத அணவல் அங்கீகார தண்டப் பணம் வருமானத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளாமல் செலுத்த வேண்டிய வைப்புக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 4,563,030 தொகை பெறுமதியான நிலையான சொத்துக்கள் மூலதனப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகைக்காக ரூபா 2,470,914 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை வட்டியாகும் என. | - மேற்படி - |
| (ஓ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 2,091,800 தொகைக்கான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 3,271,000 தொகைக்கான முத்திரைக் கட்டணம் சிட்டையிடல் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | - மேற்படி - |
| (ஔ) | மீளாய்வாண்டில் 2022 திசெம்பர் 31 திகதி வரை செலுத்த வேண்டிய ரூபா 109,486,708 தொகை ஓய்வூதிய பங்களிப்பு தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (க) | சபைக்குச் சொந்தமான கூட்டுக் கிரயம் ரூபா 4,584,070 தொகைக்கான 18 வாகனங்கள் ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | அதன் பெறுமதி நிலையான சொத்துக்கள் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (ங) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வீட்டு வாடகை காசுக் கணக்கு மற்றும் வீட்டு வாடகை வைப்புக் கணக்கு மீதிகளிடையே ரூபா 2,753,908 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | மீதிகளிடையே வித்தியாசத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | - மேற்படி - |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 16 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 277,697,350 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசங்களை இனங்கண்டு கணக்கினை சரி செய்ய வேண்டும். |

**1.6.3 தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 111,553 தொகைக்கான தொங்கல் கணக்கின் மீதி மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்ப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என. | மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 930,426,450 தொகைக்கான 13 கணக்கு விடயங்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு தேவையான விரிவான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தன. | சான்றுகள் சமர்ப்பிப்பதற்கு முடியாதுள்ளது என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

**விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) மாகாண சபை நிதி விதி 476 மற்றும் 477 | சபைக்குச் சொந்தமான அனைத்து வாகனங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | வருடாந்த பண்டக் கணிப்பீடு மூலம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விதிக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 3,309,144 தொகை பெறுமதியான காலவதியான வைப்புக்களை ஆதனவழிப்புச் செய்திருக்கவில்லை. | வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 66,596,685 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 253,560,459 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 253,942 தொகை பெறுமதியான 15 காசோலைகள் மதிப்பளிக்கப்படாமல் 3 வருடங்களுக்கும் 24 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விரைவாக தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) 1993 நவம்பர் 13 திகதிய நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் சுற்றறிக்கை இலக்கம் 15 இற்கு இணங்க சேமிப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 16,832,559 இற்கான மீதியை பயன்படுத்துவதற்காக முறையான வேலைத் திட்டமொன்று சபையினால் சமர்ப்பித்திருக்கவில்லை. | ஹியாரே நீர்த் தேக்கத்தை மையமாக கொண்டு அபிவிருத்திச் செயற்திட்டமொன்று செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 112,500,000 | 113,645,131 | 88,558,593 | 230,704,649 | 101,200,000 | 104,905,650 | 69,204,375 | 205,618,111 |
| வாடகை | 117,882,000 | 58,438,908 | 61,189,509 | 41,964,452 | 118,631,000 | 38,685,461 | 41,238,426 | 44,715,053 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 33,958,000 | 26,842,014 | 24,761,694 | 7,670,591 | 40,104,000 | 18,797,608 | 20,469,568 | 5,590,271 |
| ஏனைய வருமானங்கள் | 56,596,000 | 131,758,201 | 129,375,318 | 5,328,202 | 49,988,000 | 287,661,249 | 285,984,120 | 2,945,319 |
| மொத்தம் | 320,936,000 | 330,684,254 | 303,885,114 | 285,667,894 | 309,923,000 | 450,049,968 | 416,896,489 | 258,868,754 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வருட ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 178,343,608 இற்கான வீதவரி நிலுவை வருட இறுதியளவில் ரூபா 195,495,805 தொகை வரை ரூபா 17,152,197 இனால் அதிகரித்திருந்தது. அவற்றில் நிலுவை வருமானம் ரூபா 100,000 தொகையினை மிகைத்துள்ள 188 ஆதனங்களில் இருந்து ரூபா 53,223,202 தொகையும் ரூபா 500,000 தொகையை மிகைத்துள்ள 31 ஆதனங்களில் இருந்து ரூபா 26,128,860 இற்கான நிலுவை மீதியொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | அறவீடு செய்வதற்காக ஆதன உரிமையாளர்களுக்கு அறிவித்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2013 ஆண்டின் பின்னர் புதிய வருடாந்த பெறுமதி மீது வீதவரி அறவீடு செய்வதற்காக ஆதனங்களின் பெறுமதியில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வாடகை வருமானம் ரூபா 44,715,053 தொகையாக காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 41,964,452 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 266 இற்கு இணங்க செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான 15 வியாபார வளாகங்கள் தொடர்பாக 637 கடையறைகள் காணப்பட்டதுடன், 2022 திசெம்பர் 31 திகதி அளவில் நிலுவை கடையறை வாடகை ரூபா 20,094,237 தொகை எனினும், மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 253(1) இணங்க நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்ட செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | 2009 ஆண்டு முதல் காலி நகர மீன் சந்தையின் 54 கடையறைகளில் 20 கடையறைகள் தொடர்பாக உடன்படிக்கை ஏதும் மேற்கொண்டிருக்காமை அல்லது கடை வாடகை அறவீடு செய்திருக்காததுடன், 2021 ஆண்டின் போது ரூபா 4,057,080 இற்கான தொகையொன்று மேற்கொள்ளப்பட்டு மேற்கூறிய 34 கடையறைகளை புத்தாக்கஞ் செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் டெண்டர் பண்ணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என. | கடையறைகளை வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | காலி மத்திய பஸ் நிலையத்தின் 20 கடையறைகள் தொடர்பாக பெறுமதி மதிப்பீட்டின் படி அறவீடு செய்யப்பட வேண்டிய கடை வாடகை ரூபா 7,082,990 தொகை மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 266 அ இற்கு முரணாக பதிவழிக்கப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை அனுமதிப்பத்திர கட்டண வருமானம் ரூபா 5,590,271 தொகை ஆக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அது ரூபா 7,670,591 தொகையாக இருந்தது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஏ) மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியிலுள்ளவாறு ஏனைய நிலுவை வருமானங்கள் ரூபா 2,945,319 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அது ரூபா 5,328,202 தொகையாக இருந்தது. | சட்ட செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ஐ) மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 184,448,164 தொகை கிடைக்க வேண்டியிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா மில்லியன் 220 இற்கான சேதனை பசளை உற்பத்தி செய்யக்கூடிய கவசிமா சேதனப் பசளை செயற்திட்டம் கிடைத்திருந்த போதிலும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படாமையால் செயற்பாட்டு அலுவல்களை நடாத்திச் செல்வதற்கு முடியாமல் இருந்தது. | குறிப்பிட்ட மதிப்பீடுகள் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என. | தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கி செயற்திட்டத்தை செயற்படுத்த வேண்டும். |

### 3.2 இனங் காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக் கட்டிட திருத்த வேலைகள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்படாமையால் நகர நிதித் திணைக்களத்தின் செலவுப் பிரிவு ரூபா 60,000 இற்கான மாதாந்த வாடகை அடிப்படையில் வேறொரு இடத்திற்கு மாற்றியமையால் ரூபா 3,600,000 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றது என. | குறிப்பிட்ட கால சட்டகத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2012 ஆண்டு கொள்வனவு செய்திருந்த ரூபா 994,900 தொகை பெறுமதியான 11 மடி கணினிகள் மற்றும் ரூபா 395,991 தொகை பெறுமதியான 09 டெப்கள் மந்திரிமார்களுக்கு | ஞாபகப்படுத்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்த போதிலும் அவை திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | நகர தொழில்சாலையின் நிர்மாண வேலைகள் உரிய முறையில் பூர்த்தி செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் மோட்டார் வாகன திருத்த வேலைகள் மற்றும் சேவை செய்தலுக்காக தனியார் துறையினருக்கு ரூபா 12,342,335 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | செயற்திட்டம் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

### 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெட்லர் வீதி பொதுச் சேவை வீடொன்று 2015 ஒக்தோபர் 01 திகதி முதல் 30 வருடங்களுக்காக கம்பனியொன்றுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், சபைக்கு அறவிடப்பட வேண்டிய வாடகை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை வாடகை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 30 வருடங்களுக்கு முன்னர் காலு சிரி உயன காணி ஏலவிற்பனை செய்யப்பட்டு சபைக்கு பொது வேலைகளுக்காக வழங்கியிருந்த 01 ஏக்கர் 12.35 பர்சஸ் இற்கான காணி பொது வேலைகளுக்காக பயன்படுத்தப்படாது இருந்ததுடன் காணியின் 10.5 பர்சஸ் கொண்ட பகுதி நபர் ஒருவரினால் அங்கீகாரம் இன்றி குடியிருக்கப்பட்டிருந்தது. | களப் பரிசோதனை ஒன்று மேற்கொண்டு அறிக்கை தொடர் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் படி தாய் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு கருமங்களுக்காக 2022 ஆண்டின் போது ரூபா 21,621,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் அந்தக் கருமம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், மாநகர சபை வளாகத்தில் சிகிச்சை நிலையம் ஒன்று உட்பட | சிகிச்சை நிலையம் மூடப்பட்டுள்ளது என. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 11 சிகிச்சை நிலையங்களில் கருமங்கள் செயற்படாமையால் இந்த சிகிச்சை நிலைய கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது. | | |
| (ஆ) | காலி மாநகர சபைக்கு சொந்தமான 132 காணிகளில் 24 காணிகள் மாத்திரம் காணிப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது. காணிகளின் பௌதீக பௌதீக ரீதியாக அமைந்துள்ள இடத்தினை இனங் காண்பதற்கு முடியாமல் போனதுடன், அவற்றில் 11 காணிகள் அங்கீகாரம் இன்றி பிடித்திருந்தது என கண்டறியப்பட்டது. | பௌதீக ரீதியாக அமைந்துள்ள இடத்தினை இனங்காணல் மேற்கொண்டு அங்கீகாரம் இன்றி பிடித்திருந்தமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மற்றும் காணிகளை அளவை செய்து தீர்த்து எல்லை வேலிகள் நிறுவுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை இனங்கண்டு பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | காலி மாநகர சபைக்கு சொந்தமான 03 பொதுச் சேவை வீடுகளின் திருத்த வேலைகள் மேற்கொண்டு பயன்படுத்தியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும் என. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துவதற்கு மற்றும் வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.6 செயற்திட்டங்கள் செய்பணிகள் மற்றும் மூலதன வேலைகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 5,000,000 இற்கான மதிப்பீட்டுக் கிரயத்திற்காக 2021 ஆண்டில் உடன்படிக்கை மேற்கொண்டிருந்த காலி மிலித்துவ எத்தெலிகொட விளையாட்டுத் திடலின் திருத்த வேலைகள் மேற்கொள்ளும் நிர்மாண வேலையை பூர்த்தி செய்யமால் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நிர்மாண வேலை 2022 மார்ச் 06 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், உரிய நேரத்தில் நிர்மாண வேலையை மேற்கொள்ளாமையால் பிரதேசவாசிகளுக்கு உரிய நலன்கள் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | நிர்மாண வேலையில் காணப்பட்ட சிக்கல் தன்மை காரணமாக கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில் லை என. | உடன்படிக்கைக்கு இணங்க செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | தடல்ல தையல் நிலையத்தை திருத்த வேலை மேற்கொள்வதற்காக 2020 ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 420,000 | திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| இற்கான மதிப்பீடு பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரினால் செயற்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தமையால் ரூபா 1,732,000 இற்கான மதிப்பீடொன்று மீண்டும் தயாரிக்கப்பட்டிருந்தது. அதனை செயற்படுத்தாமையால் தடல்ல பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு அதன் சேவை கிடைத்திருக்காததுடன், அந்தத் தையல் நிலையம் அழிவடையும் நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது. | | |

### 3.7 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்திக்கொண்டிருந்த உடன்படிக்கையின் படி 05 நிர்மாண வேலைகள் தொடர்பாக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அறிமுகப்படுத்தியிருந்த 2022 செப்தம்பர் விலை விகிதங்கள் பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த விலை விகிதங்கள் பயன்படுத்தப்படாமையால் ரூபா 1,152,153 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | மிகைக் கொடுப்பனவு அறவீடு செய்யப்பட வேண்டும். |

### 3.8 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 43 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 3,139,430 தொகைக்கான கடன் மீதி அறவிடப்படாமல் நிலுவையாகக் காணப்பட்டது. அவற்றில் 40 ஊழியர்களின் கடன் மீதியின் கூட்டுத்தொகை ரூபா 2,670,355 தொகை ஒரு வருடத்தை விட மிகையான காலமாக நிலுவையாக காணப்பட்டது. | மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், பின் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது எனவும். | நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 183(1) இற்கு இணங்க சபையின் ஊழியர்களுக்காக நிறுவப்பட்டிருந்த ஊழியர் சேமலாப அங்கத்துவ நிதிக்காக 1999 ஆண்டிற்கு முன்னர் பங்களிப்பு மேற்கொண்டிருந்த நகர சபை | எதிர் காலத்தில் விடயங்களை கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஊழியர்களுக்கான கூட்டுத்தொகை ரூபா 14,500,306 தொகை 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், அந்தப் பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |

**3.9 வாகன முறைமை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வாகனங்களை திருத்த வேலை மேற்கொள்ளும் வேலை அலகு சிதைவுற்று காணப்பட்டதுடன், அந்த இடத்தில் 26 வாகனங்கள் நீண்ட காலமாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமல் காணப்பட்டது. | இயந்திரப் பொறியியலாளர் மற்றும் முகாரி ஒருவர் காணப்படாமையால் மற்றும் வேலை அலகு வேறொரு இடத்தில் நிறுவப்பட்டிருத்தல் என. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துவதற்கு மற்றும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2020 ஆண்டில் விபத்துக்குள்ளாகிய 06 வாகனங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 04 வாகனங்களுக்குரிய காப்புறுதி நட்டஈடு பெற்றிருக்கவில்லை என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சபையினால் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கான மூலதனச் செலவுகளாக ரூபா 199,872,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த பெறுமதி ரூபா 16,690,974 தொகை ஆகும். சபைக்கு சொந்தமான நிலையான வைப்புக்களில் ரூபா 284,884,803 இற்கான நிதி ஏற்பாடுகள் காணப்பட்ட போதிலும், பாதீடு செய்யப்பட்ட அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளல் 08 சதவீதத்தை விட குறைந்த பெறுமதியை கொண்டிருந்தது. | நகர மண்டபத்தை நவீனமயப்படுத்துவதற்காக முக்கிய கவனம் கவனம் செலுத்தப்பட்டிருந்தமையால் ஏனைய அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக மூலதனச் செலவுகள் பயன்படுத்துதல் குறைந்த அளவிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்ததென. | பாதீட்டு இலக்குகளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |